04.06.2026
OS. No.**379/2025**
**வா.சா.1 –** திரு.கருணாநிதி, த/பெ தங்கவேல்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>குறுக்கு விசாரணை :–</u>**

என் தகப்பனார் தங்கவேலு மற்றும் தாயார் செல்லம்மாள் ஆகியோர்களுக்கு நானும் இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதி பாண்டியனும் வாரிசுகள் என்றால் சரிதான். நான் இளங்கலை வேதியியல் பட்டப்படிப்பு படித்திருக்கிறேன். முதல் பிரதிவாதி படிக்காதவர் என்றால் சரிதான். அவருக்கு எழுத படிக்க தெரியாது கையொப்பம் மட்டும் தான் போட தெரியும் என்றால் சரியல்ல. அவர் ஐந்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறார். எனது பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் போது 1996, 2000 மற்றும் 2001ஆகிய காலங்களில் மூன்று முறை பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் சரியல்ல. அவர்களுக்குள் பேசி மட்டும் முடித்தார்கள். நான் அந்த மூன்று பாகப்பிரிவினைகளிலும் கலந்து கொண்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எனது கையொப்பம் இல்லை. சாட்சி தற்போது அதில் தனது கையொப்பம் இருப்பதாக கூறுகிறார். 29.07.1996 ல் வீடு மற்றும் நிலங்கள் பிரித்துக் கொண்ட விவரத்திற்கு எழுதப்பட்ட ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் 20.11.2000 ம் தேதியிட்ட ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளது. 20.11.2000 ம் தேதியில் உள்ள ஆவணம் **பி.வா.சா.ஆ. 2** ஆகும். விக்ரம வருடம், தை மாதம் 3ம் தேதி, 2001 ல் எழுதப்பட்ட ஆவணத்தில் என் கையொப்பம் உள்ளது. அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.3** ஆகும். அந்த ஆவணங்களில் சர்வே எண்கள் சொல்லப்படவில்லை. ஆனால் அதில் குறிப்பிட்டு இந்தந்த காடு, வயல், தோட்டம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலம் மூன்றாவது பத்தியில் 17.10.2006 இல் எந்தவித ஆவணமும் எழுதி வைக்காமல் எனது தந்தையும், தாயும் இறந்துவிட்டார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் தொடர்பாக பேசப்பட்ட

Avdeep

போது நான் இல்லை. நான் இருந்து தான் அந்த ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றும் தற்போது வழக்குக்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது பாகப்பிரிவினை கோரி உள்ள சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் சில சொத்துக்கள் என் தகப்பனாரும், சில சொத்துக்கள் என் தாயாரும், சில சொத்துக்கள் என் சகோதரர் ஆகிய இந்த வழக்கில் முதல் பிரதிவாதி பாண்டியனும் வாங்கி இருக்கிறார் என்று சொன்னால் என் அப்பா தான் முதல் பிரதிவாதி பாண்டியன் பெயரில் வாங்கி இருக்கிறார். என் அப்பா, அம்மா சொத்துக்கள் வாங்கி இருக்கிறார்கள் என்றால் பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கி இருக்கிறார்கள். அந்த மூன்று பாகப்பிரிவினை ஆவணங்களிலும் நானும் உடன்பட்டு கையொப்பம் செய்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் மூன்று பாகப்பிரிவினைகளிலும் கலந்து கொள்ளவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி –5 ல் குறிப்பிடப்பட்டுள்ள தாப்பாய் கிராமம் புல எண்கள் 489/2, 489/3, 257/11 (புறம்போக்கு) மற்றும் 64/7 ஆகிய அயிட்ட சொத்துக்கள் 1996, 2000, 2001 ல் நடைபெற்ற பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். தாப்பாய் கிராமம் புல எண்கள் 489/2 1ஏ–ஆர்ஸ் மற்றும் 489/3 ல் 2ஏ–ஆர்ஸ் ஆகிய இரண்டு சொத்துக்களையும் பொறுத்து என் தகப்பனார் ஒரு பதிவு செய்யப்படாத கிரைய பத்திரத்தின் மூலம் தாப்பாய் கிராமத்தைச் சேர்ந்த பெரியசாமி மகன் கணேசன் என்பவருக்கு 17.10.1995ல் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றும் அந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் பெரியசாமி மகன் கணேசன் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மீதமுள்ள 5ஏ–ஆர்ஸ் நிலத்தை நான் தான் பராமரித்து அதில் வேலிக்கருவை முளைத்து இருக்கிறது என்றால் இல்லை. நான்தான் அதில் வளர்ந்து வரக்கூடிய வேலிக்கருவை மரங்களை வெட்டி பணம் சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த இரண்டு சொத்துக்களும் எனது அனுபவத்தில்

தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. சர்வே எண் 257/11 புறம்போக்கு நிலம் எனது ஊரைச் சேர்ந்த பிச்சை மகன் இளங்கோவன் பெயரில் ஒரு ஏக்கர் 38 சென்ட் பட்டா ஏற்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 257/11 ல் 40 சென்ட் நிலம் எனது பாகத்திற்கு கிடைக்கப்பெற்றது என்றும் ஏற்கனவே இரண்டு சொத்துக்களும் பாகப்பிரிவினையில் கிடைத்தது என்றும் அந்த சொத்துக்கள் அனைத்தையும் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த 40 சென்ட் நிலத்தை நான் தாப்பாய் கிராமத்தைச் சேர்ந்த ஜெயபிரகாஷ் என்பவருக்கு குத்தகைக்கு விட்டு பணம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கில் பத்தி ஐந்தில் புள்ளம்பாடி கிராமத்தைச் சேர்ந்த புல எண் 64/7 என்று குறிப்பிட்டு இருக்கிறேன். ஆனால் நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் தாப்பாய் கிராமத்தைச் சேர்ந்த சர்வே எண். 64/7 என தவறுதலாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி –6 ல் எங்கள் தகப்பனார் தங்கவேல் அவரது சகோதரர் மற்றும் மூன்றாம் நபர் கணேசன் ஆகியோர் பெயரில் சர்வே எண் 483/1 ல் உள்ள 26 சென்ட் கூட்டு பட்டாவாக உள்ளது என்று கூறியிருக்கிறேன். ஆனால் அந்த சொத்து மூன்று பாகப்பிரிவினையிலும் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து ஆகும். நான் அந்த சொத்தை தாப்பாய் கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் மற்றும் சாந்தி ஆகியோர்களுக்கு குத்தகைக்கு விட்டு அந்த வருமானத்தை வைத்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த சொத்தும் ஆரம்ப காலத்தில் இருந்து தற்போது வரை எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் பட்டா மாறுதல் செய்யப்படாது எனது கையால் ஆகாத செயல் என்றால் சரியல்ல. நான் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றி 31.10.2018 ல் பணி நிறைவு பெற்றேன். நான் பணி நிறைவு பெற்ற பிறகு என் பெயருக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து பட்டா பெயர் மாறுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரர் குறைபாடுகளை நீக்கி பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவித்ததாக

பொய்யாக சொல்கிறேன் என்றும் அவருக்கு எழுதப் படிக்க தெரியாது என்றால் சரியல்ல. அவர் அவ்வாறு எந்த ஒரு உறுதிமொழியையும் எந்த காலத்திலும் கொடுத்தது கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி –8 ல் பிரதிவாதி எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலம் கடத்தி வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2023 ல் பெற்ற பட்டாக்களை இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 17.08.2024 ல் முறையான பாகப்பிரிவினை ஏற்படுத்தும் படி முதல் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன். நான் கூடுதலாக ரூபாய் 15 லட்சம் கொடுத்தால் தான் பாகப்பிரிவினைக்கு சம்மதிப்பேன் என்று தெரிவித்ததால் நான்காவது முறையாக பாகப்பிரிவினை பதிவு செய்யப்படாமல் நின்று போனது என்றால் சரியல்ல. எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்ட காரணத்தினால் தான் தனித்தனியாக பட்டா ஏற்பட்டு எனது அண்ணன் ஆகிய முதல் பிரதிவாதி அவரது மனைவி பேருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்து இருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. நான்காவது முறையாக கடந்த 20.09.2023 ல் நான் தட்டச்சு செய்து ஒரு பாகப்பிரிவினை பத்திரம் தயார் செய்தேன் என்றால் இல்லை. நான் அவ்வாறு தயார் செய்து கொண்டு வந்த பத்திரத்தை பதிவு செய்வதற்கு மேலும் எனக்கு இரண்டு சொத்துக்கள் தரவேண்டும் என்றும், ரூபாய் 15 லட்சம் ரொக்கம் தர வேண்டும் என்று கேட்டதால் தான் அது நின்று போனது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி –13 ல் குடும்ப சொத்துக்கள் குறித்து சௌகரியத்திற்காக மட்டுமே இருவர் வசமும் ஒதுக்கி விடப்பட்டது என்று சொல்லி இருக்கிறேன். மேலும் முடிவான சட்டபூர்வமான பதிவு ஆவணம் ஏற்படவில்லை என்றும் சொல்லி இருக்கிறேன். தாப்பாய் கிராம சர்வே எண் 490A புதிய சர்வே எண் 667/6 ல் 1665 சதுர அடி அதில் பூர்விக சொத்து அளவு 462 சதுர அடி என்றால் சரிதான். பக்கத்தில் நடேசன் மகன் ரத்தினத்திடம் கிரையம் பெற்றது 552 சதுர அடி ஆகும். காசிம் சாகிப் மகன் காதர் பாட்ஷா என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்து அதே சர்வே எண்ணில் 644 சதுர அடி என்றால் சரிதான். இந்த மூன்று

சொத்துகளும் RCC மச்சு வீடு என்றால் சரியல்ல. அந்த மூன்று பாகப்பிரிவினைகளிலும் இந்த சொத்து எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு ஒதுக்கப்பட்ட சொத்தை தாப்பாய் கிராமத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் மகன் திருநாவுக்கரசு என்பவருக்கு 28.04.2007 ல் ரூபாய் மூன்றரை இலட்சத்திற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் மேற்படி RCC கட்டிடம் ஆனது என் தந்தை தங்கவேல் உடையார் அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு தாப்பாய் கிராமத்தைச் சேர்ந்த ரத்தினம் அவர்களிடம் இருந்து கிரயம் வாங்கப்பட்டும் என் தகப்பனார் காலமான பிறகு வாரிசு முறைப்படி எனக்கும், என் சகோதரர் பாண்டியன் அவர்களுக்கும் பாத்தியப்பட்டு மேற்படி சொத்து சம்பந்தமாக கிராம பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசி பஞ்சாயத்தார்கள் செய்த முடிவின்படி பாகப்பிரிவினை செய்து அதன்படி எனக்கு மேற்படி சொத்துக்கள் கிடைக்கப்பெற்றதாக குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரிதான். அந்தக் கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகும். அந்த ஆவணத்தில் விற்பனை செய்த தொகையை பொதுக்கடனுக்கு அடைப்பதற்காக பயன்படுத்தினேன் என்று கூறியிருக்கிறேன். அந்த விபரத்தை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. நான் உண்மையிலேயே அந்த சொத்தை விற்பனை செய்து கிடைத்த பணத்தை பொது குடும்ப கடனுக்கு பயன்படுத்தி இருந்தால் அதை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருப்பேன் என்றும் அவ்வாறு பயன்படுத்தாத காரணத்தினால் தான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அந்தப் பணத்தை வைத்து நான் 2008 ஆம் வருடம் லால்குடி வட்டம் ஆலங்குடி மகாஜனம் கிராமத்தைச் சேர்ந்த லூர்துசாமி என்பவரிடமிருந்து ஆறு ஏக்கர் நிலத்தை நான் கிரயம் வாங்கினேன் என்றால் அது இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத விஷயம் ஆகும். நான் அந்தப் பணத்தை கொண்டு தான் லூர்துசாமி இடம் இருந்து சொத்தை கிரயம் வாங்கி இருக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல. நான் அரசு ஊழியர் ஆவேன். வருமான வரி செலுத்துகிறேன். நான் வருமான வரி செலுத்தும்போது சொத்து எவ்வாறு வந்தது என்று காண்பித்து இருக்கிறேன். 1996, 2000, 2001 ஆகிய மூன்று

பாகப்பிரிவினைகளிலும் பொது குடும்ப கடன் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது என்றும் யார் யார் எந்தெந்த கடனை அடைக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் நான் தான் அடைத்தேன். முதல் பிரதிவாதி கடனை அடைக்க வில்லை. நான் பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு கடன் பாண்டியன் பேரில் வாங்கிய ரூபாய் 20,500 அசல் செலுத்தினேன். சங்கேந்தியை சேர்ந்த தங்கவேல் மற்றும் புள்ளம்பாடியைச் சேர்ந்த அர்ஜுனன் ஆகிய இருவருக்கும்மற்றும் ஒரு நபருக்கும் தலா ரூபாய் 1000 செலுத்தினேன். நான் விற்பனை செய்து கிடைத்த பணம் ரூபாய் மூன்றரை லட்சத்தையும் கூட்டுக் குடும்ப கடனுக்காக அடைத்ததாக வழக்கிற்க்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

Advocate